பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**20 11 2025** **THURSDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பது தொடர்பாக ஆளுநர்கள் மற்றும் குடியரசுத் தலைவருக்கு நீதிமன்றங்கள் காலக்கெடு எதையும் நிர்ணயிக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

**2)** தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளில் இதுவரை **95** சதவீத விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

**3)** உயர்கல்வித்துறையின் வளர்ச்சிக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

**4)** மாநிலத்தில் குற்றச்சம்பவங்கள் அதிகரித்து வருவதாக பிஜேபி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது.

**5)** உலகக்கோப்பை இறுதி குத்துச்சண்டை போட்டியில் இந்தியா **5** தங்கம், **4** வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

சட்டப்பேரவைகளில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பது தொடர்பாக ஆளுநர்கள் மற்றும் குடியரசுத் தலைவருக்கு நீதிமன்றங்கள் காலக்கெடு எதையும் நிர்ணயிக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதுதொடர்பாக, குடியரசுத் தலைவர் எழுப்பிய வினாக்கள் குறித்து விசாரணை மேற்கொண்ட தலைமை நீதிபதி திரு **B R** கவாய் தலைமையிலான ஐந்து நீதிபதிகளை கொண்ட அரசியல் சாசன அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பது தொடர்பான விதிகளை முறையாக பின்பற்றாமல் ஆளுநர்கள் அவற்றை நிறுத்தி வைப்பது கூட்டாட்சி நலனுக்கு எதிரானது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளில் இதுவரை **95** சதவீத விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இப்பணிகளில் **2** லட்சத்து **50** ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுவரை **6** கோடியே **11** லட்சத்து **61** ஆயிரத்து தொள்ளாயிரத்து **47** விண்ணப்பங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தருமபுரி மாவட்டத்தில் மட்டும் **96** சதவீத விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு சதீஷ் கூறியுள்ளார்.

இன்று தருமபுரியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — தண்டபாணி - 43 Sec. )***

<<<<<<>>>>>>

உயர்கல்வித்துறையின் வளர்ச்சிக்கு தமிழக அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக மாநில அமைச்சர் திரு சிவசங்கர் கூறியுள்ளார்.

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் அருகே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான கட்டிட திறப்பு விழாவில் பங்கேற்று அவர் பேசினார்.

மாணவர்களின் நலனுக்காக செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

அனைவரும் உயர்கல்வி பயில வேண்டும் என்ற நோக்கில் தமிழக அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு சிவசங்கர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் குற்றச்சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பெண்களுக்கு எதிரான வன்கொடுமை சம்பவங்கள் 60 சதவீதம் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

போதைப்பொருள் புழக்கத்தையும் கட்டுப்படுத்த திமுக அரசு உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

சொத்துவரி மற்றும் மின் கட்டண உயர்வால் அனைத்துத்தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று தினங்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Voice Byte — செந்தாமரை கண்ணன் — 40 Sec. )***

<<<<<<>>>>>>

மாநில அளவில் சிறந்த பள்ளிக்கான விருதினை சேலம் மாவட்டம் கொண்டப்ப நாயக்கன்பட்டி அரசு பள்ளி வென்றுள்ளது.

ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றுவதால் இந்த விருது சாத்தியமானதாக அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு அந்தோணி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — அந்தோணி - 44 Sec. )***

<<<<<<>>>>>>

குற்றாலம் பிரதான அருவியில் மலையிலிருந்து அடித்து வரப்பட்ட ஐந்தடி நீளம் கொண்ட மலைப்பாம்பை வனத்துறையினர் பிடித்தனர்.

பின்னர் அந்த மலைப்பாம்பு வனப்பகுதிக்குள் விடப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — செந்தில் — 49 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

செங்கல்பட்டு மாவட்டத்திற்கான தொழிலாளர் துணை ஆணையர் அலுவலகத்தினை மாநில அமைச்சர்கள் திரு தா மோ அன்பரசன், திரு சி வி கணேசன் ஆகியோர் இன்று திறந்துவைத்தனர்.

-------------------

நாமக்கல் மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திர கிடங்கில் ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-------------------

மதுரை விமான நிலையத்தில் ஆட்சியர் திரு பிரவீன்குமார் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-------------------

வேலூர் மாவட்ட விவசாயிகள் தங்களது நில உடமைகளை இம்மாத இறுதிக்குள் பதிவு செய்யுமாறு வேளாண் துறை கேட்டுக்கொண்டுள்ளது.

-------------------

சர்தார் வல்லபாய் பட்டேலின் 150-ஆவது பிறந்த தின கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக மாணவர்கள் பங்கேற்ற ஒற்றுமை பேரணி இன்று திருச்சியில் நடைபெற்றது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை இறுதி குத்துச்சண்டை போட்டியில் இந்தியா ஐந்து தங்கம், நான்கு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

கிரேட்டர் நொய்டாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் **54** கிலோ எடைப்பிரிவில் **Preeti**-யும், **48** கிலோ எடைப்பிரிவில் **Minakshi**-யும், **51** கிலோ எடைப்பிரிவில் **Nikhat Zareen**-னும், **70** கிலோ எடைப்பிரிவில் **Arundhati Choudhary**-யும், **80** கிலோ எடைப்பிரிவில் **Nupur Sheoran**-னும், தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் **50** கிலோ எடைப்பிரிவில் **Jadumani Singh**-ம், **55** கிலோ எடைப்பிரிவில் **Pawan Bartwal**-லும், **65** கிலோ எடைப்பிரிவில் **Abinash**-ம், **80** கிலோ எடைப்பிரிவில் **Ankush**-ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

----------------

**Deaflympics** போட்டியில் இந்தியாவின் **Diksha Dagar** தங்கப்பதக்கத்தையும், **Mahit Sandhu** வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் கோல்ஃப் பிரிவில் **Diksha Dagar** தங்கப்பதக்கத்தை வென்றார்.

மகளிர் **50** மீட்டர் துப்பாக்கிச்சுடும் பிரிவில் **Mahit Shandhu-**க்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

----------------

மஸ்கட்டில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manush Shah — Diya Chitale** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<END>>>>>>**